ஏற்படும் என்பது குறித்தெல்லாம் விரிவாக மக்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறோம். எங்கெல்லாம் மது விற்பனை செய்யப்படுகின்றதோ, அந்த இடங்களில் எல்லாம் 'குடி குடியைக் கெடுக்கும்' என்று எச்சரிக்கை பலகைகள் பொருத்தப்படுகின்றன. அதுமட்டுமல்ல; ஆங்காங்கு உள்ள மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, சிறப்பு விளம்பர முயற்சிகளை எல்லாம் எடுத்து, விளம்பரப்படுத்துவதோடு, குடியின் தீமைகளை மக்களிடம் விளக்குவதற்காக பல்வேறு விழிப்புணர்வு முகாம்களையெல்லாம் இன்றைக்கும் ஒரு பிரச்சார உத்தியாகவே அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை நமது மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. என்னுடைய உரையை இத்துடன் நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மிக்க நன்றி. (சிரிப்பு) மிக்க நன்றி.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (2-11-2012) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

19. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

20. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராஃபைட் நிறுவனத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)